IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, SALEM.

RTROP.No.177/2021

Deposition of CW-1 witness for the petitioner solemnly affirmed under the provisions of Oaths Act (No.44 of 1969), this 17.02.2022

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆறுமுகம் | Caste | : |
| S/o.W/o.D/o. | : பிச்சைக்கன்னு | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Chief Examination:-

நான் இம்மனுவில் கோரிக்கையாளர் ஆவேன். நான் இந்த வழக்கில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்கிறேன். கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுமாய் கோருகிறேன்.

1. 18.3.2016 ல் டிவி.சுந்தரம் ஐயங்கார் நிறுவனத்தால் போதீஸ் நிறுவனத்தில் விற்பனை செய்த கிரயப்பத்திரம் சான்றிட்ட நகல் Ex.C1
2. 28.4.2017 ல் டிவி.சுந்தரம் ஐயங்கார் அன்ட் சன்ஸ் நிறுவனத்தால் ST ரீடெய்ல் நிறுவனத்திற்கு ஏற்படுத்திக்கொடுத்த விற்பனை கிரயப்பத்திரம் Ex.C2
3. 6/12/2017 ல் டிவி.சுந்தரம் ஐயங்கார் அன்ட் சன்ஸ் நிறுவனத்தால் மங்கள் & மங்கள் நிறுவனத்திற்கு ஏற்படுத்திக்கொடுத்த விற்பனை கிரயப்பத்திரம் Ex.C3

மனுப்படி தீர்ப்பாக கோருகிறேன்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கிரயம் பெற்றதற்கான கிரயப்பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரயம் பெற்றபோது என்ன விலை கொடுத்து வாங்கினேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் கிரயம் பெற்ற நிலத்தின் விஸ்தீர்ணம் சுமார் 1256 சதுர மீட்டர் ஆகும். இந்த நிலத்தில் 29.5 சதுர மீட்டர் அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த நிலத்தை அரசானது நெடுஞ்சாலைக்காக ஆர்ஜிதம் செய்ததுபோக மீதி நிலம் நெடுஞ்சாலைக்கு அருகில் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யும்போது அது காலி நிலமாகதான் இருந்தது. இன்றைய தேதி வரை நான் வைத்துள்ள மீதி நிலத்திற்கும் நெடுஞ்சாலைக்கும் சென்று வர நேரடி வழி உள்ளது என்றால் சரிதான். நிலம் ஆர்ஜிதம் செய்த பிறகுதான் எனது நிலத்தின் வழிகாட்டுதல் மதிப்பு அதிகாகி உள்ளது என்றால் தவறு. நில ஆர்ஜித அதிகாரியிடம் மேற்படி நிலத்தினுடைய மதிப்பை நிர்ணயம் செய்ததை ஆட்சேபித்து நான் எழுத்து மூலமாக கொடுத்தேனா என்றால் இல்லை. வாய்மொழியாக தான் சொன்னேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கண்ட சொத்திற்கான மதிப்பையும் பரிசீலனை செய்துதான் நிலத்திற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. நில ஆர்ஜிதம் சொத்திற்கு விலை நிர்ணய்ம செய்வதற்கு ஆர்ஜித அதிகாரி ஆர்ஜிதம் செய்வதற்குண்டான 15(2) நோட்டிசிற்கு முன்பு 3 வருடத்திற்கான விற்பனையை கணக்கில்

எடுத்துக்கொண்டுதான் என்னுடைய நிலத்திற்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் ஆர்ஜித அதிகாரி சரியான முறையில் நிலத்தை மதிப்பீடு செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள Ex.C3 ஆவணம் அறிவிப்பிற்கு பின்னிட்டு ஏற்பட்டது என்பதால் அதை கணக்கில் எடுத்துக்கொள்ள கூடாது என்றால் சரியல்ல. ஏற்கனவே நில ஆர்ஜிதம் செய்தபோது எனக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்காக 100 சதவிகிதம் ஆறுதல் தொகை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நில ஆர்ஜித அதிகாரி நிர்ணயம் செய்த தொகை சரியானது என்றும், அதில் எந்தவித குறைபாடும் இல்லை என்பதால் நான் தாக்கல் செய்துள்ள கோரிக்கை மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. விற்பனை புள்ளி எடுத்துக்கொள்ளாத ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Sd/- S.Kumaraguru,

Principal District Judge, Salem.